மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-55

(ஏ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2020), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

@ 16-9-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், சொல்லுங்கள்.*

திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 அக்டோபர் திங்களில் நடைபெற்றிருக்க வேண்டிய மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கான தேர்தல் தொடர்ந்து பல்வேறு காரணங்களுக்காகத் தள்ளி வைக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. மேயர் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று ஒரு முறையும், மேயர் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று இன்னொரு முறையும், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் மற்றும் மகளிர் இட ஒதுக்கீட்டை முறைப்படுத்திட வேண்டும் என்கின்ற வகையில் பல முறையும், வாக்காளர் பட்டியல் சரிபார்த்திட வேண்டுமென்று ஒரு முறையும், நீதிமன்ற உத்தரவுகளின்படி பல முறையும் இந்தத் தேர்தல் தொடர்ந்து தள்ளி வைக்கப்பட்டு, இப்போது கடந்த நான்காண்டுகளாக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இல்லாத மாநகராட்சிகளாக, நகராட்சிகளாக இருந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில்தான் இன்றைக்கு மீண்டும் தனி அலுவலர்கள் பதவி நீட்டிப்புக்கான ஒரு சட்டமுன்வடிவு வந்திருக்கிறது. கொரோனா பேரிடர் காலத்தில் மாநகராட்சிப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்புகளை நாம் அன்புகூர்ந்து நினைத்துப் பார்க்க வேண்டும். சென்னையில் 1 இலட்சத்து 50 ஆயிரத்து 572 பேர் இன்று காலை 9-00 மணிவரை பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; 3,004 பேர் இன்று காலை 9-00 மணிவரை மரணமடைந்திருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு மாநகரிலும், நகரங்களிலும் ஏராளமானோர் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். இந்தக் கணக்கைப் பொறுத்தவரை, உலகில் 150-க்கும் மேற்பட்ட நாடுகளில் ஏற்பட்ட பாதிப்பைவிட, ஒரு மாநகராட்சியில் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்பை என்பது கூடுதலாக இருந்துகொண்டிருக்கின்றது. எனவே, இந்தப் பேரிடர் காலத்தில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இருந்திருப்பார்களேயானால், நிச்சயம் அவர்களுடைய பணியின் காரணமாக பாதிப்பை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தியிருக்க முடியும்; அதைக் குறைத்திருக்க முடியும். எனவே, இந்தத் தேர்தலை தொடர்ந்து நடத்தாமல் இருப்பதால், பல பாதிப்புகளை நாம் அடைந்து கொண்டிருக்கின்றோம். தற்போது இந்தச் சட்டமுன்வடிவை ஏற்றுக்கொள்வதற்கான நோக்கக் காரணங்களாக அச்சிட்டு தரப்பட்டிருக்கின்ற விவரங்கள் மிகவும் நகைப்பிற்குரியதாகவும், மலிவான காரணங்களாகவும் இருந்து*

கொண்டிருக்கின்றன. வாக்குச்சாவடிகளை அடையாளம் காணுவது இனிமேல்தான் என்கின்ற வகையில் ஒரு காரணம்; மின்னணு வாக்கு இயந்திரங்களைக் கையாளுவதற்கு அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்றும், அந்தப் பயிற்சியை இனிமேல்தான் அளிக்கவிருக்கிறோம் என்கின்ற வகையில் இன்னொரு காரணம். அதோடு மட்டுமல்லாமல், மின்னணு வாக்கு இயந்திரங்களை. . . *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், உரையை சுருக்கமாக முடியுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மின்னணு வாக்கு இயந்திரங்களுக்கான மென்பொருளை மேம்படுத்திட வேண்டுமென்கின்ற இன்னொரு காரணம். இவை எல்லாவற்றையும்விட எல்லைகளை வரையறுப்பதற்கு திட்டம் தீட்ட வேண்டுமென்கின்ற மிக முக்கிய அதிசயமான காரணம். இப்படிப்பட்ட காரணங்களைச் சொல்லிச் சொல்லியே தேர்தலைத் தள்ளி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நிச்சயம், இந்தத் தேர்தல் இப்போது நடக்காது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

1996 ஆம் ஆண்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முதல்வராக வந்ததற்குப் பிறகுதான், ஒரு கால் நூற்றாண்டுக் காலத்திற்குப் பிறகு மாநகராட்சிக்கும், நகராட்சிக்கும் தேர்தல் நடந்தது. அதேபோல், மாநகராட்சி, நகராட்சிகளுக்கான தேர்தல் கடைசியாக 2011 ஆம் ஆண்டில் நடைபெற்றது. மீண்டும் சொல்கிறேன், 2021 ஆம் ஆண்டு கழகத் தலைவர், வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்கின்றபோதுதான் இந்தத் தேர்தல் நடைபெறும், இது உறுதி என்பதைப் பதிவு செய்து, விடைபெறுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, அடுத்த Bill பற்றி இப்போதே சொல்லிவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு Bill-க்கும் ஒன்றாகச் சேர்த்தே பதில் சொல்லட்டும்.

பிற்பகல் 3-00

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 மாவட்டங்களில் ஊராட்சிகளில் தேர்தல் நடத்தாமல் இருக்கிறார்கள். நீங்கள் தேர்தலை நடத்தாத காரணத்தினால்,

2020 செப்டம்பர் 16] [திரு. கு. பிச்சாண்டி]

இப்போது தனி அலுவலரைப் போட்டுக்கொண்டே இருக்கிறீர்கள். பல மாநிலங்களில் நவம்பரில் தேர்தலை நடத்துகிறார்கள்; பல மாநிலங்களில் தேர்தலை நடத்தப் போவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்தில் தேர்தல் நடத்துகிற மாதிரி ஒரு நிலையே இல்லாமல் இருக்கிறது. இப்போது ஊராட்சிகளில் தலைவர்கள் யாருக்கும் பணமே இல்லாமல் எல்லோரும் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஊராட்சிகளில் தேர்தலே நடைபெறவில்லை. மாவட்ட ஊராட்சி முகமைகளில்தான் டெண்டர் நடக்க வேண்டும், ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம் அதிகாரிகள் இல்லாத ஒரு நிலையிருக்கிறது. அதேபோல, மத்திய அரசாங்கம் வழங்க வேண்டிய 6,000 கோடி ரூபாய், உள்ளாட்சிகளில் தேர்தல் நடத்தாத காரணத்தினால் அந்தப் பணம் வராமல் இருக்கிறது. அதனால் தமிழ்நாட்டில் அடிப்படை வசதிகளைச் செய்ய முடியாமல் இருக்கிறது. ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் ஆகிய 5 மாதங்களாக மாநில நிதி ஆணையத்திலிருந்து (SFC) ஊராட்சிகளுக்கு இன்னும் நிதி கொடுக்கப்படாமல் இருக்கிறது. இன்றைக்கு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் எல்லாம் வந்த பிறகுதான் கிராமங்களில் விளக்குகளெல்லாம் ஒழுங்காக எரிகின்றன, உள்ளாட்சிகளுக்கு அடிப்படையான தேவைகள் பூர்த்தியாகியிருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்டவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய இந்தத் தேர்தலை நடத்தாமல் தொடர்ந்து அரசு அலுவலர்களுக்கு பணி நீட்டிப்பு தருவது ** என்பதைத் தெரிவித்து, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊரக உள்ளாட்சித் தேர்தல் அறிவிக்கையை 3-12-2019 அன்று வெளியிட்டது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசின்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2020 செப்டம்பர் 16

கொள்கை முடிவின்படி, மாநகராட்சி மேயர், நகராட்சித் தலைவர் மற்றும் பேரூராட்சித் தலைவர் ஆகிய பதவிகளுக்கான நேரடித் தேர்தலிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு, மறைமுகத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த நிலையில், ஊரக உள்ளாட்சித் தேர்தலை மட்டும் மாநில தேர்தல் ஆணையம் முதல் கட்டமாக அறிவித்தது. உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் தி.மு.க. தொடர்ந்த வழக்கில் 6-12-2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களைத் தவிர்த்து மீதியுள்ள 27 மாவட்டங்களுக்குத் தேர்தலை நடத்த உத்தரவிட்டது. மேலும், புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களுக்கான வார்டுகள் மறுசீரமைப்புப் பணிகளை முடித்து உள்ளாட்சித் தேர்தலை 3 மாதக் காலத்திற்குள் நடத்திட உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஊரக உள்ளாட்சித் தேர்தலை 27 மாவட்டங்களில், இரண்டு கட்டங்களாக 27-12-2019 மற்றும் 30-12-2019 ஆகிய தேதிகளில் வெற்றிகரமாக நடத்தி முடித்து, இத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 91,920 ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் 6-1-2020 அன்று பதவியேற்றுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து மாவட்ட ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் கிராம ஊராட்சித் துணைத் தலைவர் ஆகியோரை தேர்ந்தெடுக்கும் பணி, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் நடத்தி முடிக்கப்பட்டது. இந்தத் தேர்தலைப் பொறுத்த அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர் சொன்னது மாதிரி, first நீங்கள்தான் தேர்தலை நிறுத்தியது; நான் பழைய சப்ஜெக்ட்டுக்குள் போக விரும்பவில்லை. தேர்தல் ஆணையம் தேர்தலை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறது. இன்றைக்கு உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் இது தொடர்பாக நீங்கள் வழக்குத் தொடுத்தீர்கள். அதனடிப்படையில் மாநிலத் தேர்தல் ஆணையம் தேர்தலை நடத்தி முடித்திருக்கிறது.

மாநில எல்லை மறுவரையறை ஆணையம், உள்ளாட்சி வார்டு எல்லைகளை 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் மறுசீரமைப்பு-delimitation செய்யும் பணிகளை மேற்கொண்டது. முதல்கட்டமாக புதிதாக உருவாக்கப்பட்ட 9 மாவட்டங்களிலும் வரைவு வார்டு மறுவரையறை

2020 செப்டம்பர் 16] [திரு. எஸ்.பி. வேலுமணி]

அறிக்கைகளை பொது மக்களின் பார்வைக்கு வெளியிட்டு கருத்துகள் மறுபடியும் பெறப்பட்டன. அதைத் தொடர்ந்து காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் மாநில மறுவரையறை ஆணைய கருத்துக் கேட்புக் கூட்டங்களை அந்தந்த மாவட்டங்களில் 27–2–2020, 5–3–2020, 6–3–2020, 7–3–2020 மற்றும் 10–3–2020 ஆகிய தேதிகளில் நடத்தியது. வரைவு வார்டு மறுவரையறை அறிக்கைகளின்மீது அரசியல் கட்சிகளிடமும், பொது மக்களிடமும் 3,436 மனுக்கள் பெறப்பட்டு, உரிய விதிமுறைகளைப் பின்பற்றி, கள ஆய்வு மேற்கொண்டு, 1,213 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் வார்டு மறுவரையறை அறிக்கை, final delimitation proposal சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட மறுவரையறை அலுவலகத்திலிருந்து, மாநில மறுவரையறை ஆணையத்திற்குப் பெறப்பட்ட வார்டு மறுவரையறை கருத்துகளை, உரிய பரிந்துரையுடன் அரசுக்கு மாநில மறுவரையறை ஆணையம் அனுப்பியுள்ளது. இந்த பரிந்துரைகள் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

இதனிடையே 25–3–2020 அன்று முதல் COVID 19 நோய்த் தொற்று பரவல் காரணமாக பொது இடங்களில் மக்கள் கூடுவதற்குத் தடை விதித்து ஊரடங்கு உத்தரவு அரசால் பிறப்பிக்கப்பட்டது. வார்டு மறுவரையறைப் பணிகள் நடத்தி முடிக்கப்பட்டு, அரசிதழில் வெளியிடுவதற்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து வார்டுகளுக்கான இடஒதுக்கீடும் உடனடியாகச் செய்து முடிக்கப்படும். மேலும், மீதமுள்ள 27 மாவட்டங்களில் அடங்கியுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்துவதற்கான உள்ளாட்சி வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். சட்டமன்றத் தேர்தல் வாக்காளர் பட்டியல்படி தொடர்புடைய உள்ளாட்சி பதிவு அலுவலரால் உரிய விதிமுறைகளின்படி, உள்ளாட்சி வாக்காளர் பட்டியல் தயாரித்து, மாநில தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட வேண்டும்.

பிற்பகல் 3–05

இந்நிலையில் COVID 19 நோய் பரவியுள்ள அனைத்து மாவட்டங்களிலும் தொற்று நோய்த் தடுப்பு நடவடிக்கையில் தொடர்புள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகள், துப்புரவுப்

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2020 செப்டம்பர் 16

பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிப் பணியாளர்கள் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டு நோய்த் தடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள் ஆகியோரை உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான பணிகளிலும் முழுமையாக ஈடுபடுத்தப்பட வேண்டியுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கொடிய COVID 19 தொற்று நோய்த் தடுப்புப் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் உள்ளதால், அவர்களைத் தற்போது மாநில தேர்தல் ஆணையத்தால் உள்ளாட்சித் தேர்தல் பணிகளுக்கு ஈடுபடுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. மேலும், கொடிய தொற்று நோய் COVID 19 தடுப்புப் பணி முக்கியமான அவசரப் பணியாக உள்ளதால், மாநில தேர்தல் ஆணையம், அனைத்து வாக்காளர்கள், வேட்பாளர்கள், அரசுப் பணியாளர்கள், காவல் துறை பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் ஆகியோரின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை சமரசம் செய்ய இயலாத நிலையில் உள்ளது. COVID 19 தொற்று நோய் காரணமாக ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, மேற்கு வங்காளம், பீகார் மற்றும் கோவா ஆகிய மாநிலங்களில் நடத்தப்பட வேண்டிய உள்ளாட்சித் தேர்தல்கள், தொடர்புடைய மாநில தேர்தல் ஆணையங்களால் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இக்கொடிய COVID 19 தொற்று நோய் பாதிப்பு வெகுவாகக் குறைந்து, உள்ளாட்சித் தேர்தல் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்த பின்பு இயல்பான சூழ்நிலை அமையப்பெறும் நிலையில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் உரிய தேர்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்சூழ்நிலையில் தனி அலுவலர் பதவிக் காலத்தை 31-12-2020 வரை மேலும் 6 மாதக் காலத்திற்கு அல்லது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுபட்ட 9 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல்கள் முடியும் வரை இதில் எது முந்தியதோ அதுவரை நீட்டிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது பல்வேறு பணிகள் நிறைவடையாமல் இருப்பதாகச் சொன்னார்கள். இதைப்பற்றி இங்கே நான் சுருக்கமாகச் சொல்கின்றேன். நகராட்சி நிருவாகம், பெருநகர சென்னை மாநகராட்சி, பேரூராட்சி, ஊரக உள்ளாட்சி

2020 செப்டம்பர் 16] [திரு. எஸ்.பி. வேலுமணி]

போன்றவற்றிலெல்லாம் 51,802 கோடி ரூபாய் மதிப்பில் 46,38,000 பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே இந்தச் சட்டத் திருத்தத்தினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 18 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 18 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2020), மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,